# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2243/1 - 2021 අගෝස්තු මස 30 වැනි සඳුදා - 2021.08.30

*2243/1 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**அதிமேதகு சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

இலங்கை முழுவதும் தற்போது வேகமாகப் பரவிவரும் கொவிட்-19 தொற்றுப்பரவல் நிலைமையினுள், இலங்கையில் பொதுமக்கள் அவசரகால நிலைமை நிலவுவதன் காரணமாக, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் இயல்புநிலைமையைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல் மற்றும் சேவைகளை நடத்திச்செல்லல் என்பவற்றுக்காக இவ்வாறு செய்வது சந்தர்ப்பசூழ்நிலைக்கு ஏற்றதென நான் கருதுவதாலும்;

சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினாலும் மற்றும் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அக்கட்டளைச் சட்டத்தின் II ஆம் பகுதியின் ஏற்பாடுகளை அமுல்படுத்தி அதன் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்வண்ணம் ஆக்கப்பட்ட, அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கான அவசரகால சட்ட ஒழுங்குவிதிகளை இலங்கை முழுவதும் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி இவ்வேளையிலிருந்து அமுலுக்குவர வேண்டுமென இப்பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.


1A - G 34887 — 385 (2021/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.